# குர் ஆன் ஒரு அறிமுகம்

## பின்னணி

குர் ஆன் தனித்துவம் வாய்ந்த ஈடு இணையில்லாத, நிகற்றர நூலாகும். இது மனித குலத்திற்கு வழி காட்டுவதற்காக மகிமை மிக்க இறைவனால் இறுதி வேதமாக அருளப்பட்டது. இதற்கு முன்னரும் இறைவன் அவ்வப்போது தன் தூதர்கள் வாயிலாக மனித சமுதாயத்திற்கு நேர் வழி காட்டிட பல வேதங்களை அருளி இருக்கிறான்.

பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு ஆகியவற்றிற்கு பிறகு மனித குலத்திற்கு நேர் வழியை காட்டும் இறைவனின் இறுதி ஏற்பாடாக குர் ஆனை அருளி இருக்கிறான். இதற்கு முன் இறைவன் தன் தூதர்களின் வாயிலாக உபதேசித்த அதே மார்க்கத்தைதான் இதுவும் போதிக்கிறது.

முந்தைய வேதங்கள் போல் அல்லாமல் இந்த குர் ஆன் இறைவனால் அருளப்பட்ட மொழியான அரபி மொழியில் பாதுகாப்புடன் இன்றும் நம்மிடத்தில் இருக்கிறது.

நமக்கு பழக்கப்பட்ட புத்தகங்களிடமிருந்து இதன் நடையின் வகை (genre) வித்தியாசமானது. ஆகையால் குர் ஆனின் ஆழமான விஷயங்களை அறிய விரும்பும் ஆர்வலர்களுக்கு இதன் நடையின் தன்மையை அறிந்து கொள்ளுதல் அவசியமாகிறது. மேலும் குர் ஆனின் கருப்பொருளையும் (theme) மற்றும் கட்டமைப்பையும் (structure) ஒரு சேர பார்க்கும் ஆர்வலர்களுக்கு இந்த வேதத்துடன் ஒரு ஆழ்ந்த ஈடுபாடுடன் கூடிய தொடர்பை ஏற்படுத்தும். அதன் சுவையை அனுபவிக்க ஆரம்பித்து, மனதின் திறனை மேலும் மெருகுட்டும். அவ்வாறு வசீகரிக்கப்பட்டு விரும்பி படிக்கும்போது அறிவார்ந்த உணர்வுகளை தூண்டி உண்மை நிலையை அறிந்து அறிவின் களஞ்சியத்திற்கு கொண்டு செல்லும். இறைவனின் நடைமுறை வழக்கத்தையும் , இயக்குதல் முறைகளையும் அறிந்து கொள்ளும் நிலையை அடைய முடியும். இப்பிரபஞ்சத்தை படைத்து பரிபாலிக்கும் இறைவனோடு பேசுவது போன்ற உணர்வு நம் மனம் எழுப்பும் கேள்விகளுக்கு பதில் வாயிலாக ஏற்படும் இறைவனை நம் கண்களால் பார்க்க முடியாது. ஆனால் அறிவால் அவனோடு உறவாடும் போது அவனை அறிய முடியும். உணர்வுகள் இந்நிலைக்கு அடையும் போது அறிவும் மனமும் சந்தோஷத்தில் திளைத்திருக்கும். இந்நிலை மேலும் உயர்ந்து ஒரு வகையான அமைதி நிலவி, இந்நூல்

நிச்சயமாக வானத்தின் மறு புறத்திலிருந்து வந்ததுதான் என்ற உண்மையை தெளிவாக புரிந்து கொள்ளமுடியும்.

## குர் ஆனின் இலக்கிய வகையினம்

குர்ஆன் ஒரு தனித்துவமான தலைசிறந்த இலக்கிய படைப்பாகும், இது மனிதன் அறிந்த இலக்கிய வகைகளில் வேறு எந்த முன்னுதாரணமும் இல்லை. சந்தேகத்திற்கு இடமின்றி, இந்த புத்தகத்தின் வகையை தற்போதைய நாம் அறிந்த எழுத்து நடைகளுடன் ஒப்பிடுவது கடினம். இருப்பினும், இதன் வகை (genre) பேச்சாளரின் சொற்பொழிவின் பாணிக்கு நெருங்கிய ஒற்றுமை வடிவில் இருக்கிறது. இந்த உரையாடல்களின் தொகுப்பு ஏழாம் நூற்றாண்டில் அரேபிய பிரதேசத்தில் உண்மையான கதாபாத்திரங்களுக்கு இடையே நடைபெற்றதாகும். இந்த கதாபாத்திரங்கள் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையை சார்ந்ததாகும். அவைகளுக்கு இடையே நடைப்பெற்ற உரையாடல்களின் தொகுப்பாக இதை எளிமையாக புரிந்து கொள்வதற்கு ஒரு உதாரணமாக சொல்லலாம். புதுப்புது கதாபாத்திரங்கள் காட்சிகளில் தோன்ற தோன்ற காட்சி மாற்றங்கள், உரையாடல்களின் தன்மை மாறிக்கொண்டே வருகிறது. இந்த மாற்றங்கள் அடிக்கடி நிகழ்வதை கூர்ந்து கவனித்தால் அறியலாம். வல்லமை மிக்க இறைவனே இந்த உரையாடல்களை எழுதியவன் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

சொல்வீராக மற்றும் அது தொடர்புள்ள வார்த்தைகள் அடிக்கடி உபயோகப் படுத்திருப்பது குர் ஆனின் உரைநடை தன்மைக்கு சாட்சியாக இருக்கின்றது. பல வசனங்களில் ஒவ்வொரு கதாபாத்திரங்களையும் அழைத்து பேசும் பாணிகள் மற்றும் வடிவங்களும் உரைநடை வகையை சார்ந்ததாகவே இருக்கின்றது. அநேக இடங்களில் பேசுபவர் மற்றும் பேசப்படுபவர் யார் என்பதை சந்தர்ப்பம் மற்றும் சூழலை பொருத்து தீர்மானிக்கப்பட வேண்டி இருக்கிறது. வழக்கமான உரையாடல் படைப்புகளில், பேச்சாளரின் பெயர் ஆசிரியரால் எழுதப்படுகிறது. குர்ஆனைப் பொறுத்தவரை, இதை வாசகர்களே புரிந்து கொள்ள வேண்டும்.

நமக்கு புரிந்து கொள்ளும் பொருட்டு மனிதர்கள் எழுதிய நூல்களை உதாரணத்திற்காக சொல்ல வேண்டுமென்றால், இந்த பாணியை ஓரளவு கையாண்ட நூல்களாக DIALOGUES OF PLATO (பிளேட்டோவின் உரையாடல்கள்), டான்டேவின் "DIVINE COMEDY" மற்றும் சர் முஹம்மது இக்பாலின் "ஜாவேத் நாமா" ஆகியவற்றை குறிப்பிடலாம். இந்நூல்களில் உரையாடல் நடை பின்பற்றப் பட்டிருக்கிறது.

குர் ஆனில் உரையாடல் இறைவனுக்கும் மற்ற கதாபாத்திரங்களுக்கிடையேயும், சில இடங்களில் கதா பத்திரங்களுக்கிடையேயும் நடை பெற்றிருக்கிறது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

குர் ஆனில் வரும் கதாபாத்திரங்களை கீழே வகைப்படுத்தியபடி பிரிக்கலாம்.

- கேப்ரியல் GABRIEL
- இறைத் தூதர்(கள்)
- சாத்தான் (SATAN)
- விசுவாசிகள் (முழுமையாக நம்பிக்கை கொண்டவர்கள் ) BELIEVERS
- நயவஞ்சகர்கள் (வெளி வேஷக்காரர்கள் ) HYPOCRITES
- பல தெய்வ வழிபட்டாளர்கள் POLYTHEISTS
- வேத புத்தகம் உள்ளவர்கள் (யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்கள்) PEOPLE OF BOOKS (JEWS AND CHRISTIANS)

7 ஆம் நூற்றாண்டின் அரேபியாவின் இந்த கதாபாத்திரங்களுக்கு இடையில் ஒரு கட்டமைக்கப்பட்ட உரையாடல்களாக இந்நூலில் இறைவனின் வார்த்தைகளாக காணலாம். இவ் உரையாடல் ஒரு கதாபாத்திரத்தினால் தொடங்கப்பட்டு மற்றொரு கதாபாத்திரத்தை நோக்கி செல்கிறது.

இக்கதாபாத்திரங்கள் ஒன்றோடு ஒன்று உரையாடிக்கொண்டு இருக்கும். பேசும் கதாபாத்திரமும், கேட்கும் கதாபாத்திரமும் மாறிக் கொண்டே இருக்கும். இந்த உரையாடல்களில் பேசுபவர் மற்றும் பேசப்படுபவரின் மாற்றங்களை உற்று நோக்கி அறிந்து கொண்டால், வாக்கியங்களுக்கு இடையே நமக்கு தோன்றும் கோர்வையற்ற அமைப்பு நீங்கி ஒரு தெளிவான செய்தியாக தென்படும்.

சில சமயங்களில் சொற்பொழிவு பல கதாபாத்திரங்களை நோக்கியும் இருக்கும். சில நேரங்களில், பேசப்படும் சங்கதி ஒரு குறிப்பிட்ட கூட்டத்தாரை நோக்கி வலிமை மிக்க கடுமையான உரையாக இருக்கும். சில சந்தர்ப்பங்களில், எந்த ஒரு கூட்டத்தாரையும் குறிப்பிடாமல் பொதுவாக இருக்கும். சில சந்தர்ப்பங்களில், ஒரு குறிப்பிட்ட கூட்டத்தாரை நோக்கி பேசுவது போல் இருக்கும், ஆனால் மறைமுகமாக அது வேறு ஒரு கூட்டத்தாரை பற்றியதாக இருக்கும். வேறு சில சமயங்களில் ஒரு செய்தியை நேரடியாக வார்த்தைகளால்

குறிப்பிடாமல் விஷயத்தை உணரும் வகையில் சொல்லப்பட்டிருக்கும். உயர் ரக இலக்கிய ரசனை உள்ளவர்கள் இந்த நுணுக்கங்களை புரிந்து கொள்ள முடியும்.

இந்த உரையின் மாற்றங்கள் பேசுபவரின் மன நிலை மற்றும் உணர்ச்சிகளான அன்பு, இரக்கம், வெறுப்பு, கண்டனம், பாராட்டு ஆகியவற்றை வெளிப்படுத்துவதாக அமைகிறது. சில நேரங்களில் கோபத்தை வெளிப்படுத்தும் விதமாக பேசிக்கொண்டிருந்த விஷயம் முடிவுக்கு வராமல் நிறுத்தப்படுகிறது.

பேசப்படும் சூழல் தெளிவாக இருக்கும் பட்சத்தில் விரிவான விவரிக்கை தவிர்க்கப்படுகிறது. சில நேரங்களில், ஆரமபத்தில் சொற்பொழிவு யாரை நோக்கி பேசப்படுகிறது என்பது தெளிவாக தெரியாது. அப்பேச்சு தொடர தொடர யாரை நோக்கி சொல்லப்பட்டது என்பது தெளிவாகும். இந்த உரையாடல்களின் கவர்ச்சி அறிவை தூண்டி இதயத்தை கிளறி விடும். தெய்வீக வசனங்களின் வாதங்கள் ஒரு வசீகர நிலைக்கு எடுத்து செல்கிறது. வலுவான வாதங்கள் மனதில் ஆழமாக பதிந்து, வெறும் அறிவுபூர்வமான வாதமாகவோ அல்லது தத்துவமாகவோ நின்று விடாமல் படிப்பவரின் செயல்களுக்கு ஊக்க கருவியாகவும், அடித்தளமாகவும் அமைகிறது.

ஒரு குறிப்பிட்ட அணுகுமுறையை கைவிடவும் மேலும் அதற்கு மாற்றாக மற்றொரு அணுகுமுறையை ஏற்றுக் கொண்டு செயல் படவும் தூண்டப்பப்ட்டு, அதை செயல்படுத்துவதால் ஏற்படும் அசாதாரண மாற்றங்களை உணரலாம். ஒரு விஷயத்தை விரிவாக எடுத்து சொல்ல வாதங்கள் பயன்படுத்தப்படுகிறது. பல நேரங்களில் இந்த வாதங்கள் தெளிவாக சொல்லப்படுகிறது. சில சமயங்களில் ஆணை மற்றும் சத்தியம் செய்து சூசகமாக சொல்லப்படுகிறது. இலக்கியத்தின் பல்வேறு அணுகுமுறைகள் பற்றிய தகவல்கள் இருக்கும் நபருக்கு இது தரும் செய்தியை துல்லியமாக அறிய முடிகிறது. உதாரணமாக அலிஃப், லாம் என்ற சொல் இலக்கியத்தில் எவ்வாறு பல விதங்களில் உபயோகப் படுத்தப்படுகிறது என்ற தகவல் உள்ளவர் குர் ஆனின் அரபி மொழியில் படிப்பவர் ஒரு உயர்ந்த நுணுக்கமான புரிதலை அடைய முடியும். சுருக்கமாக சொல்வதென்றால், குர் ஆனின் உரையாடல் பாணியினை புரிந்து கொள்ளுதல் மிக மிக அவசியமானதாகும். குர் ஆனின் இந்த

குறிப்பிட்ட style-ன் காரணமாக கீழ்க் கண்ட விஷயங்களை கவனித்ததில் கொள்வது அவசியமாகிறது.

1. பேசுபவர் மற்றும் கேட்பவர் (எவருக்கு சொல்லப்பட்டு இருக்கிறது) யார் என்பதை ஒவ்வொரு சூரா (அத்தியாயம்) விஷயத்திலும் தீர்மானிப்பது அவசியமாகும். இதை இன்னும் தெளிவாக சொல்ல வேண்டுமென்றால் எந்த கதாபாத்திரம் எந்த கதாபாத்திரத்துடன் உரையாடுகிறது என்பதை தீர்மானிக்க வேண்டும். கேட்பவர் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டும் இருக்கலாம். ஒரே அத்தியாயத்தில் பேசுபவர் மாறுபடலாம். அதையும் கூர்மையாக கவனிக்க வேண்டும்.
2. பேச்சாளருக்கும், பேசுபவருக்கும் இடையே ஏற்படும் மாற்றங்கள் மிகவும் உன்னிப்பாக கவனிக்கப் பட வேண்டும். இந்த மாற்றங்கள் பல இடங்களில் தெளிவாக இருக்கும். சில இடங்களில் மறைந்திருக்கும். இந்த மாற்றங்கள் கவனிக்கப் படவில்லை எனில் வசனங்களுக்கு இடையே தொடர்பின்மை போல் தெரியும்.
3. ஏழாம் நூற்றாண்டில் அரேபிய தீபகற்பத்தில் இல்லாத கதாபாத்திரங்கள் குர் ஆனில் விவாதிக்கப்பட வில்லை. விதி விலக்காக ஏதோ ஒரு காரணத்திற்காக சில விஷயங்கள் மேலோட்டமான குறிப்போடு கடந்து சென்று விடும். இக் காரணத்தினால் தான் ஹிந்து மற்றும் புத்த மாதங்கள் பற்றி குர் ஆனில் குறிப்பிட படவில்லை.
4. குர் ஆனின் முதல் கேட்போர் வரிசையில் ஒரு குறிப்பிட்ட பின்னணியை கொண்டிருப்பதால் அவர்கள் தொடர்பான நம்பிக்கை, கலாச்சார மற்றும் பழக்க வழக்கங்கள் குறித்து பேசப்படுகிறது. அரேபிய குறைஷிகள் மட்டும் இல்லாமல் அப்பிரதேசத்தை சார்ந்த யூத மற்றும் கிறிஸ்தவர்கள் பற்றி பேசப்படுகிறது. அப்பிரதேச யூதர்களின் நம்பிக்கையில் உஜேர் அலைஹிஸ்ஸலாம் கடவுளின் மகனாக ஏற்றுக் கொண்டது மற்ற பிரதேச யூதர்களின் நம்பிக்கை பட்டியலில் இல்லை என்பது குறிப்பிட தக்கது.

# கருப்பொருள் (மையத்தலைப்பு)

குர் ஆனின் இந்த நடை வகையுடன் அதன் கருப்பொருள் (மையத்தலைப்பு) மற்றும் கட்டமைப்பு பற்றியும் ஆர்வலர்கள் கவனம் செலுத்த வேண்டும். குர் ஆனின் மையப் பொருளை அறிய சில பின்னணியை நினைவுக் கொள்ளுதல் அவசியம். மனிதக்குல வரலாற்றை இரு பெரும் பிரிவுகளாக பிரிக்கலாம். இந்த வரலாற்றின் முதல் பகுதியான "இறைத்தூதுவர்கள் சகாப்தம்" மிகவும் பெரும்

பகுதியை கொண்டது. இக்கால கட்டத்தில், இறைவன் மனிதர்களில் சிலரை தேர்ந்தெடுத்து , அவனின் தூதர்களாக நியமித்து, அவர்கள் வாயிலாக தனது வழி காட்டுதலை மனிதர்களுக்கு அருளினான்.

இது ஆதம் (அலைஹிஸ் ஸலாம்)-ல் தொடங்கி முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் ) வரை இக்கால கட்டம் இருந்தது. இரண்டாவது கால கட்டம் முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் மறைவிற்கு பிறகு தொடங்கி உலகம் அழியும் வரை ஆகும். இக்கால கட்டத்தில் எந்த ஒரு இறைத்தூதரும் இறைவனால் உலகிற்கு அனுப்புவதில்லை.

தூதர்களின் கால கட்டத்திற்கு ஒரு சிறப்பு அம்சம் உள்ளது. இது தூதர்களுக்கு பிந்தைய கால கட்டத்தில் காணப்படுவதில்லை.

தூதர்கள் காலத்திற்கான இறைவனின் நியதியை குர் ஆனில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நியதி ரசூல் என்ற தூதர்களுக்கு (நபி என்பது மற்றொரு வகை தூதர்கள்) பொருந்தும். இந்த தெய்வீக திட்டத்தை **"சுன்னத்துல்லாஹ்"** என்று குர் ஆன் கூறுகிறது.

உமக்கு முன்னால் அனுப்பப்பட்ட நம்முடைய அனைத்துத் தூதர்கள் விஷயத்திலும் நாம் கடைப்பிடித்து வந்த நிலையான நியதி இதுவே. நமது நியதியில் நீர் எந்த மாறுதலையும் காணமாட்டீர்! (17: 77)

தூதர்களின் காலத்திற்கான இந்த நியதி மற்றும் அதற்கான நடைமுறை விளக்கங்களுடன் குர் ஆனில் பதியப்பட்டு இருக்கிறது. இது இயற்கை பேரழிவு மூலமாகவோ அல்லது தூதர்கள் மூலமாகவோ செயல்படுத்தப்பட்டது. இந்த நியதிக்கும் ஷரீயத் சட்டங்கள் சம்பந்தப்பட்டதல்ல.

எளிமையாக சொன்னால், தூதர்கள் காலம் மற்றும் இடத்தை சேர்ந்த நேரடியான மக்களுக்கு அல்லது முன்னணியில் உள்ளவர்களுக்கு எந்த வித சந்தேகத்திற்கு இடமில்லாமல் விளக்கப்படுகிறது. கூடவே அதற்கான அத்தாட்சிகளும் எடுத்து வைக்கப்படுகிறது. யார் வேண்டுமென்றே இச்செய்தியை ஏற்க மறுக்கிறார்களோ அவர்களுக்கு இயற்கை பேரழிவு மூலமாகவோ அல்லது தூதர் மூலமாகவோ தண்டனை இவ்வுலகில் வழங்கப்படுகிறது. உண்மையை ஏற்றவர்களுக்கு வெகுமதி அளிக்கப்படுகிறது.

குர் ஆன் இந்த வெகுமதி / தண்டித்தலை இவ்வாறு கூறுகின்றது.

ஒவ்வொரு வகுப்பினருக்கும் ஒரு தூதர் (நம்மால்) அனுப்பப்பட்டார்கள். அவர்களுடைய தூதர் (அவர்களிடம்) வந்த சமயத்தில் (அவரைப்

பின்பற்றியவர்களை பாதுகாத்தும், பொய்யாக்கியவர்களை அழித்தும்) அவர்களுக்கிடையில் நீதமாகவே தீர்ப்பளிக்கப்பட்டது. அவர்களுக்கு (அணுவளவும்) அநியாயம் செய்யப்படவில்லை. (10: 47)

இவ் உலகத்திலேயே மக்களுக்கு அவர்களின் செய்கைக்கான பிரதிபலன் அளிப்பதில் ஒரு நோக்கம் உள்ளது.

ஒருவனின் செயல்களின் அடிப்படையில் மறுமையில் இறைவனிடம் கூலி (சன்மானம் அல்லது தண்டனை) கிடைக்கும் என்பதை நினைவூட்டுவது இதன் நோக்கமாகும். இந்த யதார்த்தத்தை அவன் பெரும்பாலும் மறந்து விடுகிறான் அல்லது புறக்கணிக்கிறான்.

இறைவன் இதை மனித சமுதாயத்திற்கு ஒரு நினைவூட்டலாக தனது தூதர்கள் (ரசூல்கள்) மூலமாக உறுதிப்படுத்துகிறான். உலகத்தில் உள்ள மற்ற மக்களுக்கு மறுமையில் கிடைக்கும் சன்மானம் அல்லது தண்டனையை தூதர்கள் காலத்து/தேசத்து மக்களுக்கு இப்பூமியிலேயே ஒரு சிறு தீர்ப்பு நாளை அரங்கேற்றுகிறான். சுருக்கமாக சொல்வதென்றால் ஒரு மிகப்பெரிய தீர்ப்பு நாளைக்கு முன்னர் ஒரு முன்மாதிரியான சிறிய அளவில் தீர்ப்பு சொல்லப்படுகிறது.

குர் ஆன் இதை பின்வருமாறு கூறுகிறது:

இறைத்தூதர்கள் அனைவரும் நற்செய்தி அறிவிப்பவர்களாகவும் எச்சரிப்பவர்களாகவும் அனுப்பி வைக்கப்பட்டார்கள். ஏனெனில், அத்தூதர்கள் அனுப்பப்பட்ட பிறகு அல்லாஹ்விடம் முறையிட மக்களுக்கு ஆதாரம் ஏதும் இருக்கக் கூடாது என்பதற்காக! மேலும், எந்நிலையிலும், அல்லாஹ் யாவற்றையும் மிகைத்தவனாகவும், நுண்ணறிவாளனாகவும் இருக்கின்றான். (4: 165)

தூதர்களின் காலத்தின் இந்த சிறப்பு அம்சம் காரணமாக குர் ஆனின் சில நெறி முறை / உத்தரவுகள் இக்காலத்திற்கு மட்டுமே பொருந்தும். இவைகளை தூதர்கள் காலத்திற்கு பிறகு நீட்டிக்க முடியாது. அதற்காக இச்சட்டங்கள் அர்த்தமற்றவை என்று சொல்ல முடியாது. தூதர்கள் இல்லாத காலத்தில் இச்சட்டங்கள் செயல்படுத்த முடியாது, ஆனால் தூதர்கள் காலத்தில் அவை செயல்படுத்தியதன் விளைவாக ஏற்பட்ட தாக்கங்கள் தற்சமய மக்களுக்கு வாழ்க்கை முறையில் பிரதிபலிக்கின்றன.

குர் ஆன் கொடுக்கும் உத்தரவு/ கட்டளைக்கான அடிப்படைகளை புரிந்து கொள்வதன் மூலம் கட்டளை தூதர்கள் காலத்திற்கு மட்டுமா

அல்லது எல்லா காலத்திற்கும் பொதுவானதா என்பதை அறிய முடியும்.

இந்த வேறுபாட்டை அறியாததின் விளைவாக குர் ஆனைப் பற்றி பல தவறான கருத்துக்களும், ஐயப்பாடுகளும் உருவாகின்றன.
இந்த பின்னணியில் தான் குர் ஆனின் கருப்பொருள் பற்றி நிர்ணயிக்க முடியும். ஒரு வாக்கியத்தில் சொல்ல வேண்டும் என்றால் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் அச்சமூட்டி எச்சரித்த நிஜ வரலாற்றின் தொகுப்பே குர் ஆன் ஆகும்.. இதை அரபியில் இன்ஜார் என்று குறிப்பிடுகிறது. உண்மையை ஏற்க மறுப்பதால் இவ்உலக வாழ்க்கையிலும் மறுமையிலும் ஏற்படும் விளைவுகளை பற்றி தகவல்களின் தொகுப்பாகும். இந்த செய்தியை எவ்வித சந்தேகங்களை விட்டு வைக்காமல் முழுவதுமாக அக்கால அரபு மக்களுக்கு விளக்கி முன் வைக்கப்பட்டது.

இறைவனின் தூதர்களை அனுப்பி தெளிவான ஆதாரங்களுடன் இம்மை மற்றும் மறுமையை பற்றி அச்சமூட்டி எச்சரிக்கும் இந்த நியதி உலக வரலாற்றில் கடைசியாக அரேபியாவில் நடந்தேறியது.

இந்த நிறுவப்பட்ட நடைமுறையை குர்ஆன் பின்வரும் வார்த்தைகளில் குறிப்பிடுகிறது:

ஒவ்வொரு வகுப்பினருக்கும் ஒரு தூதர் (நம்மால்) அனுப்பப்பட்டார்கள். அவர்களுடைய தூதர் (அவர்களிடம்) வந்த சமயத்தில் (அவரைப் பின்பற்றியவர்களை பாதுகாத்தும், பொய்யாக்கியவர்களை அழித்தும்) அவர்களுக்கிடையில் நீதமாகவே தீர்ப்பளிக்கப்பட்டது. அவர்களுக்கு (அணுவளவும்) அநியாயம் செய்யப்படவில்லை.(10: 47)

இந்த நியதி இறைவன் தனது தூதர்கள் மூலம் மட்டும் செயல்படுத்துகிறான்.

உமக்கு முன்னால் அனுப்பப்பட்ட நம்முடைய அனைத்துத் தூதர்கள் விஷயத்திலும் நாம் கடைப்பிடித்து வந்த நிலையான நியதி இதுவே. நமது நியதியில் நீர் எந்த மாறுதலையும் காணமாட்டீர்!(17:77)

குர் ஆனில் கூறப்பட்டுள்ள கருப்பொருளிலிருந்து கீழ்கண்டவாறு பிரித்து எடுக்கலாம்.

குர் ஆனின் கூற்றுப்படி இறை தூதர் (நபி) தன் மக்களுக்கு வெறும் நல்லவர்களுக்கு நற்செய்தி அளிப்பவராகவும், அநியாயக்காரர்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவும் செயல்படுகிறார்.

நபி என்ற அந்தஸ்தை விட உயர்ந்த அந்தஸ்தான ரஸூல் என்கிற இறைத்தூதர் எவ்வித சந்தேகத்திற்கு இடமின்றி இறுதியான வரையறுக்கப்பட்ட அத்தாட்சிகளுடன் எச்சரிக்கை செய்பவராக செயல்படுகிறார். இந்நிலைக்கு குர் ஆன் இதமாமுல் ஹுஜ்ஜா (அனைத்து கோணத்திலும் விளக்கப்பட்டு, அவர்களுக்கு எழும் சந்தேகங்களுக்கு பதில் அளிக்கப்பட பின்தைய நிலை) என்று கூறுகிறது.

அல்லாஹ்வின் மீது மனிதர்களுக்கு (சாதகமாக) யாதொரு ஆதாரமும் இல்லாதிருப்பதற்காக, இத்தூதர்களுக்குப் பின்னரும், தூதர்கள் பலரை, (சுவர்க்கத்தைக் கொண்டு) நற்செய்தி கூறுகின்றவர்களாகவும் (நரகத்தைக் கொண்டு) அச்சமூட்டி எச்சரிக்கின்றவர்களாகவும் (அல்லாஹ் அனுப்பி வைத்தான்). மேலும், அல்லாஹ் (யாவரையும்) மிகைத்தோனாக, தீர்க்கமான அறிவுடையவனாக இருக்கின்றான். (4:165)

எல்லாவித ஆதாரங்களையும் ஏற்காமல் வேண்டுமென்றே இச்செய்தியை மறுப்பவர்களுக்கு குர் ஆன் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறது.

பின்னர் அவர்கள் நன்கறிந்திருந்த இவ்வேதமானது அவர்களிடம் வந்தபோது அதை அவர்கள் நிராகரித்து விட்டனர், ஆகவே, நிராகரிப்போர் மீது அல்லாஹ்வின் சாபம் இருக்கிறது. (2:89)

இந்த இதமாமுல் ஹுஜ்ஜத் நிலைக்கு பிறகு பூமியில் தெய்வீக நீதி மன்றம் அமைக்கப்பட்டு நிராகரித்தவர்களுக்கு தண்டனை வழங்கப் படுகிறது. ஏற்றுக் கொண்டவர்களுக்கு வெகுமதி அளிக்கப்படுகிறது. இவ்வாறாக மறுமையில் நிகழும் தீர்ப்பு நாளாக ஒரு சிறிய அளவில் பூமியில் நிகழ்த்தப்படுகிறது.

குர் ஆனை உற்று நோக்கும் போது ஒரு தூதரின் பிரச்சார கால கட்டங்கள் பின் வரும் நிலைகளை அடங்கியதாகும்.

1. இந்ஜார் - செய்தியை ஆரம்ப கட்டமாக தெரிவித்தல்.
2. இந்ஜாரே ஆம் - எல்லா மக்களுக்கும் செய்தி அடைதல்.
3. இத்மாமே ஹுஜ்ஜத் - சந்தேகத்திற்கு இடமின்றி எல்லாவித சந்தேகங்களுக்கும் பதில் அளித்து, அளிக்கப்பட வேண்டிய செய்தியை முழுவதுமாக விளக்குதல்.
4. ஹிஜ்ரத் வ பராஅத் - இடம் பெயர்தல் / நிராகரிக்கப்பட்டவர்களிடமிருந்து காப்பாற்றுதல்.

குர் ஆனின் ஒவ்வொரு சூராவும் (அத்தியாயங்கள்) இந்த நான்கு கால கட்டத்தின் ஏதாவது ஒரு கால கட்டத்தை பற்றியதாக இருக்கும்.

ஒரு தூதரின் பிரச்சாரம் இதமாமே ஹுஜ்ஜத் நிலைக்கு செல்லும் போது, விசுவாசிகளின் ஒரு கூட்டமும், நிராகரிப்போரின் கூட்டமும் தனித்தனியாக பிரிவு ஏற்படுகிறது. இந்த கட்டத்திற்கு பிறகு தான் இறைவனுடைய கட்டளைப்படி தூதர் தனது கூட்டத்தார் என்ன செய்ய வேண்டும் என்று தீர்மானிக்கிறார்.

குர் ஆனை உற்று நோக்கும்போது இந்த கால கட்டத்தில் நிராகரிப்போருக்கான தண்டனை சூழ்நிலையை பொறுத்து இருவகையாக உள்ளது. தூதருடன் ஒரு சிலரே இருக்கும் போது மற்றும் வேறு இடம் சென்று ஒரு கூட்டமாக அரசியல் அதிகாரத்துடன் வாழ இடம் இல்லையெனில், தூதரும் அவரின் கூட்டாளிகளும் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டு, நிராகரிப்போர் கூட்டம் மீது இயற்கை பேரழிவு மூலமாக தரை மட்டமாக்கப்படுகிறது. இதை குர் ஆன் கீழ்க் கண்டவாறு குறிப்பிடுகிறது.

இறுதியில், ஒவ்வொருவரையும் அவரவருடைய பாவத்தின் காரணமாக நாம் பிடித்தோம். பிறகு, அவர்களில் சிலர் மீது நாம் கல்மாரி பொழியும் காற்றை அனுப்பினோம். வேறு சிலரை ஒரே ஓர் உரத்த முழக்கம் பிடித்துக் கொண்டது; மற்றும் சிலரை நாம் பூமியில் புதைத்துவிட்டோம். அவர்களில் மேலும் சிலரை மூழ்கடித்துவிட்டோம். அல்லாஹ் அவர்கள் மீது கொடுமை புரிபவனாக இருக்கவில்லை. ஆனால், அவர்களே தங்கள் மீது கொடுமை இழைத்துக் கொண்டிருந்தார்கள். (29:40)

குர் ஆனில் கூறப்பட்டுள்ளபடி ஹுத் (அலை) அவர்களின் தேசம், ஸாலிஹ் (அலை) அவர்களின் தேசமான ஸமூத், நூஹ் (அலை) அவர்களின் தேசம், லூத் (அலை) அவர்களின் தேசம், ஷுஐப் (அலை) அவர்களின் தேசம் ஆகியன இறைத்தூதரின் தெளிவான ஆதாரங்களை ஏற்க மறுத்ததனால் இயற்கை பேரழிவு மூலம் அழிக்கப்பட்டனர். மூஸா (அலை) அவர்களின் தேசமான பனி இஸ்ராயீல் அவரை மறுக்கவில்லை, ஆனால் ஃபிர்அவுன் கூட்டத்தினர் மறுத்ததினால் அழிக்கப்பட்டனர்.

அதற்கு மாறாக, இரண்டாவது விதமான சூழலில் விசுவாசிகளின் கூட்டம் அதிகமாக இருக்கும் போது இறைத்தூதர் இறைவனின் உதவியோடு வேறு இடத்திற்கு இடம் பெயர்ந்து ஆட்சி அதிகாரத்தோடு செயல் படுகிறார். இத்தருணத்தில் தூதரும் அவர்கள் கூட்டத்தார் வலிமையை பயன்படுத்தி நிராகரிப்போரை வெல்கின்றனர்.

நிராகரிப்போருக்கான தண்டனை முதல் வகைக்கு இறைவனிடமிருந்து நேரடியாக சூழ்ந்து கொள்கிறது, இரண்டாவது வகைக்கு விசுவாசிகள் மூலம் தண்டிக்கப்படுகின்றனர். இரண்டாவது வகையான சூழல் நபிகள் நாயகத்திற்கு ஏற்பட்டது. முஸ்லிம்களின் வாள் சக்தியினால் நிராகரிப்போர் தண்டிக்கப்பட்டனர்.
இதைப்பற்றி குர் ஆன் கீழ்க் கண்டவாறு கூறுகிறது:

நீங்கள் அவர்களோடு போர் புரியுங்கள்; அல்லாஹ் உங்களுடைய கைகளால் அவர்களுக்குத் தண்டனை அளிக்கச் செய்வான். மேலும், அவர்களை இழிவுபடுத்துவான். இன்னும் நீங்கள் அவர்களை வென்றிட உங்களுக்கு உதவி புரிவான். மேலும், நம்பிக்கை கொண்ட மக்களின் இதயங்களைக் குளிரச் செய்வான் (9:14)

உண்மை யாதெனில், நீங்கள் அவர்களைக் கொல்லவில்லை; அல்லாஹ்தான் அவர்களைக் கொன்றான்! மேலும் (நபியே!) நீர் எறிந்தபோது உண்மையில் எறிந்தது நீரல்லர். மாறாக, அல்லாஹ்தான் எறிந்தான். மேலும், (இறை நம்பிக்கையாளர்களை இதில் பங்கேற்கச் செய்தது எதற்காகவெனில், அல்லாஹ் நம்பிக்கையாளர்களை நன்மை தரக்கூடிய சோதனையில் ஆழ்த்தி வெற்றியடையச் செய்ய வேண்டும் என்பதற்காக! திண்ணமாக அல்லாஹ் நன்கு செவியுறுபவனாகவும், அறிபவனாகவும் இருக்கின்றான்.(8:17)

இதை வேறு விதமாக சொல்ல வேண்டுமென்றால், தூதர்களின் அத்தாட்சிகளையும், ஆதாரங்களையும் நேரடியாக விளக்கப்பட்டு அதை முழுவதுமாக கேட்ட பிறகும் மறுக்கும் கூட்டத்திற்கு இறைவன் நேரடியாக தண்டனை வழங்குகிறான். இதில் தூதரும் அவர்களின் சகாக்களும் ஒரு கருவியாக பயன்படுத்தப்படுகின்றனர்.

இறைத்தூதரின் செய்தியை நேரடியாக கேட்டு மறுக்கும் கூட்டத்திற்கு ஏற்படும் அவமானமும், தண்டனையும் இரண்டு வகையாக ஏற்படுகிறது. ஓரிறை கொள்கையை ஏற்றுக் கொண்ட கூட்டம், தூதரின் தலைமையை ஏற்றுக் கொண்டால் இத்தண்டனையிலிருந்து காப்பாற்றபடுகின்றன. பல தெய்வ வழிபாடும் கூட்டம் அழைக்கப்படுகின்றது. ஏனெனில் இறைவன் பல தெய்வ வழிபாட்டை என்றும் ஏற்றுக்கொள்வதில்லை. இது இறைவனுடைய மிக முக்கியமான நியதி ஆகும்.

நிச்சயமாக, தனக்கு இணை வைக்கப்படுவதை அல்லாஹ் மன்னிப்பதில்லை. இதைத் தவிர அனைத்துப் பாவங்களையும் தான் நாடுகின்றவர்களுக்கு மன்னித்து விடுகின்றான். அல்லாஹ்வுக்கு இணைவைப்பவர்கள், திண்ணமாக பெரும் பொய்யைப் புனைந்தவராவர்; மேலும் பாவத்தைப் புரிந்தவராவர். (4:48)

இதனால், பனி இஸ்ராயீலர்கள் ஒரு கூட்டமாக அழைக்கப்படவில்லை. ஏனெனில், வேதம் பெற்ற கூட்டமாக இருந்த காரணத்தினால் அவர்கள் அடிப்படையில் ஓரிறைக்கொள்கையை பின்பற்றினர். ஆனால் கியாமத் நாள் வரை அவர்களுக்கு ஈஸா (அலை) அவர்களை பின்பற்றுபவர்களின் கீழ் வாழ்க்கை நடத்திக் கொள்ள அனுமதிக்கப்பட்டனர்.

(ஈஸாவை நோக்கி) அல்லாஹ் கூறியதை (அவர்களுக்கு) ஞாபகப்படுத்துங்கள்: "ஈஸாவே! நிச்சயமாக நான் இப்போது உம்மைத் திரும்ப அழைத்துக் கொள்வேன். மேலும் உம்மை என்னிடம் உயர்த்திக் கொள்வேன்; உம்மை நிராகரித்தவர்களிடமிருந்து (அதாவது அவர்களுடைய தொடர்பிலிருந்தும், அவர்களுடைய தூய்மையற்ற சூழ்நிலையில் நீர் வாழ்வதிலிருந்தும்) உம்மைத் தூய்மைப்படுத்துவேன்; இறுதித் தீர்ப்புநாள்வரை உம்மைப் பின்பற்றுவோரை நிராகரிப்பவர்களைவிட உயர்த்தியே வைப்பேன். இறுதியில் என்னிடம் நீங்கள் அனைவரும் வந்தேயாக வேண்டும். அப்போது நீங்கள் கருத்து வேற்றுமை கொண்டிருந்தவற்றில் நான் உங்களுக்கிடையே தீர்ப்பு வழங்குவேன்; (3:55)

குர் ஆனின் இந்த கருப்பொருளை புரிந்து கொண்டால், இதன் விளைவாக ஒரு முக்கியமான விஷயம் வெளிவருகிறது. இறைவன் ஒருவன் தான் பலதெய்வ வழிபாடு (ஷிர்க்), நிராகரிப்பு (குஃப்ர்), விசுவாச துரோகம் (ஈர்திதாத்) ஆகிய குற்றங்களுக்கு தண்டனை வழங்க முடியும். இதை இறைவன் தனது தூதர்களின் காலத்தில் செய்தான், மேலும் மறுமையில் மற்றவர்களுக்கு வழங்குவான். தூதர்களின் பிந்தைய காலத்தில் இக்குற்றங்களுக்கு மற்றவர்கள் தண்டனை அளிப்பதற்கான உரிமை வழங்கப்படவில்லை.

# குர் ஆனின் கட்டமைப்பு

குர் ஆனின் கட்டமைப்பு ஏற்பாட்டை பற்றி கீழ் கொடுக்கப்பட்டிருக்கும் குர் ஆனின் வசனம் தெளிவாக கூறுகிறது.

நாம் உமக்கு ஏழு ஜோடிகள் (மஸானி) அதாவது மகத்தான குர் ஆனை அருளியுள்ளோம். (15:87)

இந்த வசனத்தை சற்று ஆழ்ந்து கவனித்தால் ஒரு பெரிய வெளிப்பாடு மலர்கிறது. ஏழு தனித்தன்மை வாய்ந்த தொகுப்புகள் குர் ஆனில் உள்ளது. ஒவ்வொரு தொகுப்பிலும் ஜோடி ஜோடியாக சூராக்கள் ஒரு குறிப்பிட்ட கருப்பொருளுடன் (theme) உள்ளன.

இந்த சூராக்களின் ஜோடி இணைப்பு மிகவும் அர்த்தமுள்ளதாக இருக்கிறது. ஜோடி ஸூராவின் ஒரு சூரா மற்றொரு சூராவுடன் ஏதாவது ஒரு வகையில் இணைப்பு தருகிறது. உதாரணமாக ஸூரத்துள் ளுஹா (93 வது ஸூராஹ்) மற்றும் ஸூரத்து அலம் நஷ்ரஹ் (94 வது ஸூராஹ்), ஸூரத்துல் ஃபலக் (113 வது ஸூராஹ்) மற்றும் ஸூரத்துந் நாஸ் (114 வது ஸூராஹ்) ஆகியவைகளுக்கு இடையே இருக்கிற பொருத்தம் மிகவும் தெளிவாக தெரிகிறது. மிகவும் ஆழ்ந்த பார்வை மூலம் மற்ற ஜோடி ஸூராக்களுக்கு இடையே இருக்கிற பொதுவான இணைத்து கொடுக்கும் தலைப்பை பெற முடியும். சில ஸூராக்கள் இதற்கு விதி விலக்காக இருக்கின்றன. உதாரணமாக முதல் ஸூராஹ் அல்ஃபாத்திஹா மொத்த குர் ஆனிற்கும் ஒரு அறிமுக ஸூராவாக இருக்கிறது. இதே போல் சில சூராக்கள் உதாரணமாக ஸூரத்துந் நூர் (24 வது சூராஹ்), ஸூரத்துல் அஹ்ஜாப் (33 வது ஸூராஹ்) ஆகியன அது சார்ந்த தொகுப்பின் முடிவுரையாகவோ அல்லது துணை இணைப்பாகவோ (supplement) உள்ளன.

இந்த ஏழு தொகுப்பின் சுருக்கமான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**முதல் தொகுப்பு**
{சூரா அல்-பாத்திஹா (1) - சூரா அல்-மைதா (5)}
மெக்காவில் அருளப்பட்டது : (1)
மதீனாவில் அருளப்பட்டது : (2) - (5)

**இரண்டாவது தொகுப்பு**
{சூரா அல்-அனாம் (6) - சூரா அல்-தவ்பா (9)}
மெக்காவில் அருளப்பட்டது: (6) - (7)
மதீனாவில் அருளப்பட்டது: (8) - (9)

**மூன்றாவது தொகுப்பு**
{சூரா யூனுஸ் (10) - சூரா அல்-நூர் (24)}
மெக்காவில் அருளப்பட்டது: (10) - (23)
மதீனாவில் அருளப்பட்டது: (24)

**நான்காவது தொகுப்பு**
{சூரா அல்-ஃபுர்கான் (25) - சூரா அல்-அஹ்சாப் (33)}
மெக்காவில் அருளப்பட்டது: (25) - (32)
மதீனாவில் அருளப்பட்டது: (33)

**ஐந்தாவது தொகுப்பு**
{சூரா சபா (34) - சூரா அல்-ஹுஜுராத் (49)}
மெக்காவில் அருளப்பட்டது: (34) - (46)
மதீனாவில் அருளப்பட்டது: (47) - (49)

**ஆறாவது தொகுப்பு**
{சூரா காஃப் (50) - சூரா அல்-தஹ்ரிம் (66)}
மெக்காவில் அருளப்பட்டது: (50) - (56)
மதீனாவில் அருளப்பட்டது: (57) - (66)

**ஏழாவது தொகுப்பு**
{சூரா அல்-முல்க் (67) - சூரா அல்-நாஸ் (114)}
மெக்காவில் அருளப்பட்டது: (67) - (112)
மதீனாவில் அருளப்பட்டது: (113) - (114)

இந்த தொகுப்புகளின் சில சிறப்பம்சங்கள் உள்ளன.

1. இந்த ஏழு தொகுப்புகளும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மெக்காவில் அருளப்பட்ட ஸூராக்களில் தொடங்கி ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மதீனாவில் அருளப்பட்ட சூராக்களில் முடிவடையும். ஒரு மரத்தின் வேருடன் கிளைக்கு எவ்வாறு தொடர்பு உள்ளதோ , அதே போன்று ஒரு தொகுப்பிற்குள் உள்ள மக்கா ஸூராவிற்கும் மதீனா ஸூராவிற்கும் தொடர்பு உள்ளது.
2. ஒவ்வொரு தொகுப்பிற்குள் ஸூராக்களின் வரிசை அருளப்பட்ட காலகட்டத்தின் வரிசைப் படி உள்ளது.
3. ஒவ்வொரு தொகுப்பும் நபிகள் நாயகத்தின் பிரச்சார கால கட்டங்களை ஏதாவது ஒரு கோணத்தில் விவாதிக்கிறது.
4. ஒவ்வொரு தொகுப்பிற்கும் ஒரு தலைப்பு உள்ளது. அந்த தொகுப்பில் இருக்கும் சூராக்கள் அந்த தலைப்பை சுற்றியே பேசுகின்றன.
5. இந்த தலைப்புக்கள் பின் வருமாறு உள்ளது.

**முதல் தொகுப்பு {சூரா அல்-பாத்திஹா (1) - சூரா அல்-மைதா (5)}**
இதில் வரும் தலைப்புக்கள்: அரேபியாவில் வாழும் யூத மற்றும் கிறிஸ்தவர்களுக்கு உண்மையை விளக்கி தீர்மானமான வாதத்தை வைத்தல், அவர்கள் இடத்தில் இப்ராஹிம் (அலை) அவர்களின் சந்ததியினரின் மற்றொரு பிரிவான பனு இஸ்மாயிலை ஒரு புதிய உம்மத்தாக நியமனம், புதிய உம்மத்தை ஆன்மிக சுத்தரித்தலுக்கான உத்தரவுகள் மற்றும் அவர்களுடன் உடன்படிக்கை.

**இரண்டாவது தொகுப்பு {சூரா அல்-அனாம் (6) - சூரா அல்-தவ்பா (9)}**

அரேபியாவில் வாழ்ந்த பல தெய்வ வழிபட்டாளர்களுக்கு உண்மையை வரையறுத்து உரக்க தெரியப்படுத்துதல், விசுவாசிகளின் ஆன்மிக நிலையை உயர்த்துதல், விசுவாசிகளை பல தெய்வ வழி படுபவர்களிடமிருந்து பிரித்தல், அந்த பிரதேசம் வரை ஒரு சிறிய அளவில் மறுமையின் வெகுமதி/தண்டனை பகுதியை நிறைவேற்றுதல்.

**மூன்றாவது தொகுப்பு {சூரா யூனுஸ் (10) - சூரா அல்-நூர் (24)}**

குரைஷ் மக்களை எச்சரித்தல், நபிகள் நாயகம் மற்றும் அவரை பின்பற்றுபவர்களுக்கு அரேபியாவில் உண்மை மேலோங்கும் என்ற நற்செய்தி, ஆன்மிக ரீதியில் தூய்மைப்படுத்துதல், அவர்களை விசுவாசிகள் அல்லாதோரை விட்டு தனிமைப்படுத்துதல், சத்தியத்தின் ஆதிக்கம் பற்றிய நற்செய்தி.

**நான்காவது தொகுப்பு {சூரா அல்-ஃபுர்கான் (25) - சூரா அல்-அஹ்சாப் (33)}**

நபித்துவத்தை உறுதிப்படுத்துதல், குரைஷிற்கு நற்செய்தி மற்றும் எச்சரிக்கை, விசுவாசிகளின் ஆன்மிக சுத்திகரிப்பு, விசுவாசிகளை மற்றவர்களிடமிருந்து தனிமைப்படுத்துதல், இது சம்பந்தமாக நபிகள் நாயகம் மற்றும் குர் ஆன் ஆகியவற்றின் சிறப்பு / மகிமை பற்றி விளக்குதல்.

**ஐந்தாவது தொகுப்பு {சூரா சபா (34) - சூரா அல்-ஹுஜுராத் (49)}**

ஏகத்துவ நம்பிக்கையை பற்றி விரிவான விளக்கம், அதன் மூலம் குறைஷிகளுக்கு எச்சரிக்கை, சத்தியத்தின் ஆதிக்கத்தை பற்றிய நற்செய்தி, விசுவாசிகளின் ஆன்மிக சுத்திகரிப்பு மற்றும் பல தெய்வ வழிபாடுபவர்களிடமிருந்து தனிமைப்படுத்துதல்.


**ஆறாவது தொகுப்பு {சூரா காஃப் (50) - சூரா அல்-தஹ்ரிம் (66)}**

மறுமையின் தீர்ப்பு நாளை உறுதி படுத்துதல், அந்த கோணத்தில் குறைஷிகளுக்கு நற்செய்தி/எச்சரிக்கை, விசுவாசிகளின் ஆன்மீக சுத்திகரிப்பு/செய்தியை ஏற்காதவர்களிடமிருந்து தனிமைப்படுத்துதல், இறைவனுக்கும், அவனுடைய தூதருக்கும் கீழ்ப்படிதல் பற்றிய தேவைகளின் விளக்கங்கள், கீழ்படிதலுடன் ஆன்மிக சுத்திகரிப்பு உடைய தொடர்பு ஆகியன அந்த சமயத்தின் சூழலை கருத்தில் கொண்டு விளக்கங்கள்.

**ஏழாவது தொகுப்பு {சூரா அல்-முல்க் (67) - சூரா அல்-நாஸ் (114)}**

குரைஷின் தலைமைக்கு இறுதி தீர்ப்பு நாளை பற்றி எச்சரிக்கை, அவர்களின் அனைத்து சந்தேகங்களுக்கும் விடை அளித்து, செய்தியை பரிபூரணமாக முன் வைத்தல், மறுத்ததன் விளைவாக அவர்களுக்கான தண்டனை பற்றிய செய்தி, நபிகள் நாயகத்திற்கும் அவரை பின்பற்றுபவர்களுக்கு அரேபியாவில் சத்தியத்தின் ஆதிக்கம் பற்றிய நற்செய்தி.

இந்த தொகுப்புகளின் தொடர் வரிசையை கீழ்க்கண்ட வரை படம் விளக்குகிறது.




முன்னர் குறிப்பிட்டபடி குர் ஆன் அதனது கருப்பொருளின் கோணத்தில் பார்த்தால் நபிகள் நாயகம் மூலமாக அவர் வாழ்ந்த பகுதியில் உள்ள மக்களுக்கு இறைவன் சார்பான எச்சரிக்கையின் தொகுப்பாகும். முதல் நிலை செய்தியை கேட்பவர்கள் வரிசையில் மெக்காவில் வாழ்ந்த பல தெய்வங்கள் வணங்கி வந்த குறைஷிகள் மற்றும் அரேபியா தீபகற்பத்தில் வாழ்ந்து வந்த வேதம் பெற்ற கூட்டத்தினர்களான யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்கள்.

இரண்டாவது தொகுப்பு இந்த இரு கூட்டத்தாருக்கும் இவ்வுலகத்திலேயே அளிக்கப்பட உச்சகட்ட எச்சரிக்கை மற்றும் உலகத்திலேயே சிறு அளவிலான தீர்ப்பு நாளின் முன் மாதிரி பற்றியதாகும். இந்த தொகுப்பை குர் ஆனின் உச்சகட்ட பகுதியாக கருதலாம். ஏழாவது தொகுப்பு முதல் மூன்றாவது தொகுப்பு வரை குறைஷிகளுக்கும் முதல் தொகுப்பு வேதம் பெற்ற மக்களுக்குமான செய்திகளாகும். இந்த இரு கூட்டத்தாருக்கும் இவ்வுலகில் அவர்களின் தலைவிதியை நிர்ணயிப்பதை படம் பிடித்து காட்டும் தொகுப்பாக இரண்டாவது தொகுப்பு அமைந்துள்ளது. எச்சரிக்கையின் பல்வேறு நிலைகள் மற்றும் கட்டங்கள் கடந்து வந்து இரு கூட்டத்தினரிற்கான

உச்ச நிலை ஒன்றாக இணையும் பகுதியாக இந்த தொகுப்பு அமைகிறது.

ஆறாவது தொகுப்பு, ஐந்தாவது தொகுப்பு, நான்காவது தொகுப்பு, மூன்றாவது தொகுப்பு ஆகியவற்றில் எச்சரிக்கை மட்டுமல்லாமல், விசுவாசிகளை பரிசுத்தப்படுத்த தேவையான விஷயங்களும், அவர்களை மற்றவர்களுடன் தனிமைப்படுத்துவதும் குறிப்பிடப்படுகிறது.

முதல் தொகுப்பு அந்த இடத்தில் இருப்பதற்கான காரணம் என்னவெனில் குர் ஆனை அல்லது வேதத்தை பெற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

முதல் தொகுப்பை தவிர மற்ற தொகுப்புகளில் மெக்காவில் இறக்கப்பட்ட ஸூராக்களில் எச்சரிக்கை/நற்செய்தியும், மதீனாவில் அளிக்கப்பட ஸூராக்களில் ஆன்மிக பரிசுத்தத்திற்கான வழி வகைகள் வழங்கப்பட்டுள்ளன.

நபிகள் நாயகம் மூலம் எச்சரிக்கை/நற்செய்தி அரேபியாவில் அளித்து சிறிய அளவிலான தீர்ப்பு நாளுடைய செயலை நிறைவேற்றியதை இறுதி தீர்ப்பு நாள் வரை பாதுகாப்பாக ஒரு அழகான முறையில் பதிவு செய்யப்பட்டு இருக்கிறது.

மற்ற எல்லா மக்களுக்கும் ஒரு பெரிய தீர்ப்பு நாளை பற்றிய தகவல்களுடன் வெற்றி பெற தேவையான வழி வகைகளை ஆகியவற்றை அளிக்கப்பட்டுள்ளது.

# முடிவுரை

இது வரை குறிப்பிட்ட படி குர் ஆனின் இலக்கிய வகையினம், கருப்பொருள் மற்றும் கட்டமைப்பு பற்றி குர் ஆனை பற்றி ஒரு சிறிய அறிமுகமாக பார்த்தோம். இது உரையாடல்களின் தொகுப்பாக ஒரு குறிப்பிட்ட கட்டமைப்புடன் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இந்த பூமியில் வாழும் மனிதர்களுக்கு இறைவனால் இறக்கி வைக்கப்பட்ட வழி காட்டுதலாக இது இருக்கிறது. நேர் வழியை அடையும் நோக்கத்துடன் இதை படிப்போம்.

ஜாவித் அஹ்மத் காமிதி அவர்களின் சிறு குறிப்புகளுடன் கூடிய குர் ஆன் உருது மொழி பெயர்ப்பு AL-BAYAN இந்த உரையாடல் நடையை தெளிவாக எடுத்துரைக்கிறது. அவருடைய மாணவன் என்ற முறையில் இதை உங்களுக்கு அறிமுகப் படுத்துகிறேன். கருப்பொருளும், கட்டமைப்பும், இந்த மொழி ஆக்கத்தில் தெளிவாக தென்படுகிறது.